விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 089 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 04 சனிக்கிழமை (18.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அரசுக்கு எதிராக யாழில் தீப்பந்தப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)
யாழ் - புத்தூரில் ரணில் அரசாங்கத்தின் ஆட்சி "சர்வாதிகார ஆட்சி" என கண்டித்து தீப்பந்த போராட்டம் நேற்று இடம்பெற்றது.

தற்போதைய அரசாங்கம் பொருட்களின் விலையினை அதிகரித்து சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்து வருவதாக தெரிவித்து கைகளில் தீப்பந்தங்களை தாங்கியவாறு வலி.கிழக்கு பிரதேச 11

## திருவள்ளுவர் சிலை திறப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கோட்டை சுற்று வட்டப் பாதையில் அமையப் பெற்றுள்ள திருவள்ளுவர் சிலை நேற்று திறந்து வைக்கப் பட்டது.

ரில்கோ சிற்றி ஹோட்டல் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட இந்தச் சுற்று வட் 11

## சவேந்திர சில்வா யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நாவற்குழியிலுள்ள விகாரையில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்கும் வகையில் இன்று சனிக்கிழமைசவேந்திர சில்வா யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். 11

## 19ஆம் திகதி நள்ளிரவுடன்
# உள்ளூராட்சி மன்றங்களின்
## பதவிக் காலம் முடிவடைகின்றது

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைகின்றது.

340 உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் நாளை நிறைவடையவுள்ள நிலையில், அவற்றின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் மாகாண ஆளுநர்களுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (ம-7,9)

## தமிழ் அரசியல் கைதி விடுதலை

(கொழும்பு)
2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது 11

# காங்கேசன்துறை - காரைக்கால்
# பயணிகள் கப்பல் சேவை

- ஏப்ரல் 29ஆம் திகதி ஆரம்பம்
- 120 பிரயாணிகள் பயணிக்கலாம்



(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இந்தியாவின் காரைக்கால் துறைமுகத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. 120 பிரயாணிகள் ஒரே நேரத்தில் பயணிக்கலாம். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (11ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி 4ம் கட்டையில்
## வாயில் நுரை தள்ளிய இளைஞன் உயிரிழப்பு

(பூநகரி)
பிறந்தநாள் நிகழ்வொன்றுக்கு சென்ற இளைஞன் ஒருவர் வாயில் நுரைதள்ளிய நிலையில் உயிரிழந்துள்ளார். 11

## வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியாவில் இளம் குடும்பஸ்தரொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த 42 வயதான இளம் குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,250)

## கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படும்
### கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)
கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாக கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை ஆதிசிவன் 11

# 40 அரச நிறுவனங்களை மூடுவதற்கு எதிர்பார்க்கின்றோம்
## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)
40 அரச நிறுவனங்களை மூடுவதற்கு எதிர்பார்க்கின்றோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு 11

## மோ.சைக்கிளிலிருந்து வீழ்ந்த பெண் மரணம்
### வல்லையில் சம்பவம்

(கரணவாய்)
மோட்டார் சைக்கிலிருந்து தவறிவிழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கரணவாயைச் சேர்ந்த தங்கராசா தவமணி (வயது-68) என்பரே உயிரிழந்தவராவார்.

கரணவாயில் உள்ள வீட்டிலிருந்து 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம்

# மணிவிழா வாழ்த்து



திருமதி

## பவானி புஸ்பராசா

(SLTS-I)

புங்குடுதீவு சண்முகானந்த வித்தியாலயம்
21.03.1990 - 21.03.1994
புங்குடுதீவு கணேசா மகாவித்தியாலயம்
22.03.1994 - 26.10.1996
கிளி/பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்
27.10.1996 - 01.01.2001
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
02.01.2001 - 31.12.2013
யா/வண்.ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம்
01.01.2014 - 18.03.2023

நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தும்

பாடசாலை சமூகம். (14937)

---

## கல்யான் தங்க நகை அடைவு கடை
## NTN தங்க நகை அடைவு கடை

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனங்களில் 01.10.2022 இற்கு முன்னர் அடகு வைக்கப்பட்ட நகைகள் யாவற்றையும் 18.03.2023 இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- 01.10.2022 க்கு முற்பட்ட நகைகள் யாவும் 20.03.2023 அன்று விற்கப்படும்.

(14926)

கல்யான் அடைவு கடை
இல.111, கஸ்தூரியார் வீதி,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
074 021 4111

NTN அடைவு கடை
இல.174, A, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
074 051 4131

---

## முதலாம் ஆண்டு
# நினைவலைகள்

18.03.2023



திரு. கிட்டிணன் கோபாலன்
திதி : பூர்வபக்க பிரதமை

திருமதி. கோபாலன் தவமணி
திதி : அபரபக்க துவாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.



(14927)

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி. தொ.பே. : 021 226 0045 - குடும்பத்தினர்

---

## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான Student Visa வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** JAFFNA (14917)

**076 250 0098 / 021 222 1265**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127

---

## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் மிகக் குறைந்தளவிலான வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

**தகைமைகள் :**

- பலக்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல்.

அல்லது

- கணக்கியலில் பெற்ற தொழில்சார் தகைமை
- 18 வயதிற்கு குறையாமலும் 35ற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(14920)

தொடர்புகளுக்கு :- T.P : 077 263 1426 E-Mail : jeyarajahu@gmail.com
மேல்குறிப்பிட்ட தொலைபேசி இலக்க WhatsApp அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பவும்.

---

## பாரஊர்திகள் (லொறி) ஏல விற்பனை

NP-LA 7026, NP-HA 9759 பதிவு இலக்க பாரஊர்திகள் திறந்த கேள்விக் கூறுவிலைகள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

16.03.2023 ஆம் திகதி தொடக்கம் 22.03.2023 ஆம் திகதி மதியம் 12.00 மணிவரையான காலப்பகுதியில் சங்க அலுவலக நேரத்தில் நேரடியாக வருகை தந்து விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

### தொடர்புகளுக்கு :
### 077 130 0118, 077 535 7843

தலைவர் :
**திருவையாறு படித்த வாலிபர் விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம்**
155ஆம் கட்டை, இரணைமடு. (14933)

---

## அந்தியேட்டி அழைப்பு
# 31ஆம் நாள் நினைஞ்சலி

தோற்றம்
28 . 05 . 1927



மறைவு
17 . 02 . 2023

கடந்த 17.02.2023 அன்று சிவபதமடைந்த

அமரர் திருமதி

## தனிகாசலம் வள்ளியம்மைப்பிள்ளை

**(சிவன் கோவில் மேற்கு, வல்வெட்டித்துறை)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஊறணிக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அன்று மதியம் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது பிரிவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் செய்தவர்களுக்கும், உறவினர் நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-6173)

சிவன் கோவில் மேற்கு, வல்வெட்டித்துறை.
T.P : 021 226 5087
077 313 8437
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வருடாந்தம் 10,000 காச நோயாளர்கள்

## மருத்துவர்கள் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வருடாந்தம் சுமார் 10 ஆயிரம் காச நோயாளிகள் கண்டு பிடிக்கப்படுவதாகவும் காச நோயாளிகள் சரியான நேரத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ளாது விட்டால் மரணம் கூட நேரிடும் என்றும் சுவாச நோய் தொடர்பான நிபுணர் மருத்துவர் போதிக சமரசேகர தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற காசநோய் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த தகவல்களை தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த மருத்துவர் சமரசேகர,

காசநோய் காற்றினால் பரவும் நோய் என்பதால் சிகிச்சை எடுக்காமல் இருப்பது ஆபத்தானது.

சமூகத்தில் நுரையீரல் காச நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளால் ஆரோக்கியமான மக்களுக்கு இந்த நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது.

அத்தகைய நோயாளிகள் இருமல், தும்மல், சிரிப்பு மற்றும் பேசும் போது நச்சுத் துணிக்கைகள் கொண்ட சளியின் துளிகளை சுவாசிப்பதன் மூலம் நோய்த்தொற்று ஏற்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இருமல், இரவில் லேசான காய்ச்சல், உடல் எடை குறைதல், இரவில் அதிக வியர்த்தல், பசியின்மை, சளியுடன் ரத்தம்வெளியேறுதல் ஆகியவை காசநோயின் முக்கிய அறிகுறிகள் ஆகும்.

இந்த அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால், காசநோய் எதிர்ப்பு இயக்கத்தின் மருத்துவர்கள், அருகிலுள்ள மார்பு மருத்துவமனை அல்லது சளி பரிசோதனை ஆய்வகத்திற்கு விரைவில் சென்று இலவச சளி பரிசோதனைசெய்துகொள்ளுமாறு பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அடுத்த பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், உத்தியோக பூர்வமற்ற முறையில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கும்



இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன எதிர்வரும் 23 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார். (நி)

# 12 வகையான மருந்துகளுக்கு மாத்திரமே தற்போது தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பற்றாக்குறையாக இருந்த 146 வகையான மருந்துகள் இந்திய கடனுதவியின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் தற்போது 12 வகையான மருந்துகளுக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அடுத்த சில வாரங்களில் அவை நாட்டிற்கு கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மக்கள் தொகை கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படவுள்ளது

## புள்ளிவிபரத் திணைக்களம்

நாட்டின் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் பணிகள் இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2012 ஆம் ஆண்டின்பின்னர் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான முன்னோடித் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அனுரகுமார தெரிவித்துள்ளார்.

2018 ஆம்ஆண்டு முதல் இதற்கான செயற்பாடுகளை கொரோனா மற்றும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான முன்னோடி செயற்பாடுகளை ஏப்ரல் மாதத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் மே-ஜூன் மாதமளவில் முழுமையான கள நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)




சவூதி அரேபிய மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்க்ளுக்கான மையம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ள 50 மெற்றிக்தொன் பேரீச்சம் பழங்கள் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் சாசன சமய, கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் கொழும்பிலுள்ள தூதரக வளாகத்தில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

# பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடரும்

## பல்கலை விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக தமது உறுப்பினர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, நேற்று முன்தினமும் பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

அதேநேரம், உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடுவதில் பங்கேற்பதைத் தவிர்ப்பதாகவும் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில், உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வது மேலும் 22 நாட்கள் தாமதமாகுவதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# 20 ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச் சீட்டுகளை ஒப்படைக்க முடியாது

## உத்தியோகபூர்வமாக அறிவித்தது அரச அச்சக திணைக்களம்

(கொழும்பு)

20 ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச் சீட்டுகளை ஒப்படைக்க முடியாது என அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களத் தலைவர் கங்கானி லியனகே இது தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு மற்றும் பொது வாக்கெடுப்பு ஆகியவற்றுக்குத்தேவையான வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான நிதியை வழங்க வேண்டும் என திறைசேரிக்கு கடந்த இரு வாரங்களில் இரண்டு தடவைகள் எழுத்து மூலமாக முன்வைத்த கோரிக்கைக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட அச்சிடல் பணிகளுக்கான நிதி முழுமையாக கிடைக்கவில்லை.

நிதி விடுவிப்பு தொடர்பில் திறைசேரி ஒரு உத்தியோக பூர்வமான அறிவிப்பை விடுக்க வேண்டும் என அரச அச்சகத் திணைக்களத் தலைவர் திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

நிதி கிடைப்பதில் தாமதம் காணப்படுவதால் தபால் மூல வாக்கெடுப்புக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.


தபால்மூல வாக்குச்சீட்டு விநியோகப் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

இந்த நிலையிலேயே குறித்த திகதிக்கிடையில் தம்மால் வாக்குச் சீட்டுகளை அச்சிட்டு வழங்க முடியாது என அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தேர்தல் மீண்டும் தள்ளிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அணிக்கு எதிரான

# இரண்டாவது டெஸ்ட் நியூஸிலாந்து 155-2



இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான, இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி தற்போது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் நியூஸிலாந்து அணி, இன்றைய ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டநேர முடிவில், ஹென்றி நிக்கோல்ஸ் 18 ஓட்டங்களுடனும் கேன் வில்லியம்சன் 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

வெலிங்டனில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் நியூஸிலாந்து அணி, இன்றைய ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான டொம் லதம் 21 ஓட்டங்களுடனும் டெவோன் கோன்வே 72 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், கசுன் ராஜித மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இன்னமும் 8 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (4)

## சென்.ஜோன்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு மிடையிலான வடக்கின் போர் துடுப்பாட்டப் போட்டியின் மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது ஓவர் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 49.3 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை பெற்றது.

218 என்ற இலக்கை நோக்கி பதிலளித்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-7,33)

## இலங்கைக்கு எதிரான சர்வதேச கால்பந்து தடை

### ஆதரவாக 197 நாடுகள் வாக்களிப்பு

இலங்கைக்கு எதிரான சர்வதேச கால்பந்து தடைக்கு ஆதரவாக 197 நாடுகள் வாக்களித்துள்ளன. ருவாண்டாவின் கிகாலி நகரில் நடைபெற்ற உலக கால்பந்து சம்மேளனத்தின் பொதுச் சபையில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 208 நாடுகள் கலந்து கொண்ட இந்த பொதுச் சபையில் இலங்கைக்கு சர்வதேச கால்பந்து தடை விதிக்க.197 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2787

தாரணி

அடுத்தவர்கள் விஷயத்தில் தலையிட்டால் இப்படித் தான் உங்கள் தலையும் ஒரு நாள் மாட்டும்



உன்னால் என்ன செய்ய முடியும் என்று பார் மற்றவர் விஷயத்தில் தலையிடாதே.

கருணிகா

அவன் என் பையன் அவனை நான் அடிப்பேன், திட்டுவேன் யாரும் கேட்கக் கூடாது.



அதையேதான் அத்தை நானும் சொல்றேன் அவரு என் புருஷன் அவர அடிப்பேன்,உதைப்பேன்,மிதிப்பேன் அதை யாரும் தடுக்கக் கூடாது.

கரன்

சம்பளம் வாங்கிய அந்த நாளில் மட்டும் தான்...



"வயிறு" நிறைய சாப்பிடுவார்கள் பல பேச்சுலர்கள்...!

ஆதித்தா

விபரம் தெரியாதப்ப எல்லாம் இவர் மட்டும் தான் "நடிகர் திலகம்" னு நினைச்சிட்டு இருந்தேன்



போக போகத்தான் தெரிஞ்சுது சுற்றியுள்ள எல்லோருமே நல்ல நடிக்கிற "நடிகர் திலகம்" என்று

குமரன்

வெளியில ஒரே வெயில்... நடமாடவே முடியலடா சாமி...!



ஆதிரா

அம்மாக்களுக்கு பிடித்த, தெரிந்த ஒரே ஹேர் ஸ்டைல்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக் போர் விமானங்களை உக்ரைனுக்கு அனுப்பும் போலந்து

(போலந்து)

நான்கு சோவியத் கால மிக் போர் விமானங்களை உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக, போலந்து அறிவித்துள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டு ரஷ்யா படையெடுத்த பிறகு உக்ரைனுக்கு போர் விமானங்களை அனுப்பிய முதல் நேட்டோ நாடாக போலாந்து மாறியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் குறித்த போர் விமானங்கள் அனுப்பப்படுமென போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரேஜ் டூடா தெரிவித்துள்ளார்.


உக்ரைனிய விமானிகள் பறக்க பயிற்சி பெற்ற சோவியத் காலத்து விமானங்களை அனுப்ப மற்ற நேட்டோ நாடுகளும் பரிசீலித்து வருகின்றன.

உக்ரைன் முன்னர் மேற்கத்தேய நாடுகளிடம் எஃப்-16 போன்ற நவீன போர் விமானங்களை கோரியது.

ஆனால், அமெரிக்காவிலிருந்து உக்ரைனுக்கு ஜெட் விமானங்களை அனுப்புவதை ஜனாதிபதி பைடன் முன்பு நிராகரித்தார்.

இதேவேளை, நேட்டோ தரநிலை விமானங்களில் உக்ரைன் விமானிகளுக்கு பிரித்தானியா, பயிற்சி அளித்து வருகிறது. (நி)

# 700 அடி உயரக் கட்டட மாடியில் சிறிய விமானத்தை தரையிறக்கி சாகசம்



(போலந்து)

போலந்து நாட்டு விமானி துபாயில் உள்ள 700 அடி உயர கட்டடத்தின் மாடியில் சிறிய ரக விமானத்தை தரையிறக்கி சாகசம் செய்துள்ளார்.

புர்ஜ் அல் அராப் என்ற அந்த 56 மாடி சொகுசு விடுதியின் மீது 90 அடி விட்டளவில் ஹெலிகொப்டர்கள் தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும் ஒரு இடம் அமைக்கப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர்கள் தரையிறங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட அந்த இடத்தில், லியூக் ஜெப்பிலா சிறிய ரக விமானத்தை நேர்த்தியாகத் தரையிறக்கினார்.

இந்த அபாயகரமான சாகசத்தை நிகழ்த்த, அவர் சுமார் 650 முறை விமானத்தை அங்கு தரையிறக்கி கடினமாக பயிற்சி மேற்கொண்டதாக கூறப்படுகிறது. (நி)

# ஆபிரிக்க நாடுகளைத் தாக்கிய ஃப்ரெடி சூறாவளி

## 225 பேர் உயிரிழப்பு



ஃப்ரெடி சூறாவளியால் மலாவி மற்றும் மொசாம்பிக் ஆகிய தென்கிழக்கு ஆபிரிக்க நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் மலாவி பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. 225 பேர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கணக்கானவர்கள் காயங்களுக்குள்ளாகி உள்ளனர்.


மலாவியில், இராணுவம் மற்றும் பொலிஸார் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

88,000 இற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதோடு, பலர் 165 தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

மலாவி ஜனாதிபதி லாசரஸ் சக்வேரா உலக நாடுகள் தங்களுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

13 மாதங்களில் மலாவியை தாக்கிய மூன்றாவது சூறாவளி ஃப்ரெடி எனவும் இது "காலநிலை மாற்றத்தின் உண்மைகளுக்கு ஒரு சான்று" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ரஷ்ய பாதுகாப்புத்துறை கட்டடத்தில் தீப் பரவல்



(மொஸ்கோ)

ரஷ்ய பாதுகாப்புப் படையினரின் அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டடமொன்று நேற்று முன்தினம் தீப்பற்றியுள்ளதாக உள்ளூர் அவசர சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் தென்பகுதியில், உக்ரைன் எல்லையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி)

# தெலுங்கானா வணிகக் கட்டடத்தில் தீ

## 6 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தின் வணிக வளாக கட்டடமொன்றில் ஏற்பட்ட தீயினால் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

செந்திராபாத் நகரில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

8 மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தின் 5 ஆவது தளத்தில் தீ ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், அடுத்த மாடிகளுக்கும் தீ பரவியது. அதனால், கட்டடத்தில் இருந்தவர்கள் கீழே இறங்கி ஓடினர். சிலர் ஜன்னல் வழியாக குதித்தனர்.

எனினும், சிலர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கி வீழ்ந்தனர். தீயணைப்புப் படையினர் 18 பேரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

# இராசிபலன்

18.03.2023
பங்குனி 04, சனிக்கிழமை
ஏகாதசி காலை 8.41 மணிவரை
துவாதசி பின்னிரவு- 6.19 மணிவரை

திருவோணம் முன்னிரவு 10.30 மணிவரை
சுபநேரம்-3.19-4.49 மணிவரை
இராகுகாலம்-9.19-10.49 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் -திருவாதிரை புனர்பூசம்

வளவன்



**மேஷம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



**கடகம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு, எண்ணியது நிறைவேறும் நாள், முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.



**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உறவினர்கள் வழியில் அனுகூலமுண்டு.



**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**ரிஷபம்** தேவைக்கேற்ப பணம் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உறவினர்களின் வருகையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**சிம்மம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், மறைமுக போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.



**கும்பம்** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.



**மிதுனம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களில் நிதானம் தேவை, கௌரவக் குறைவான நாள்.



**கன்னி** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிள்ளைகளின் வழியில் சுப செய்திகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.



**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**மீனம்** ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமும் அகம்பாவமும் என்றாவது ஒரு நாள் நமக்கே எதிரியாக நிற்கும்.



கொக்குவில் கலைவாணி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கால்கோள் விழாவும் மாணவர்களின் சந்தை நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

# சிலங்கிரி கதைகள் அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் புலம்பெயர் எழுத்தாளர் மனோ சின்னத்துரையின் "சிலங்கிரி" கதைகள் தொகுப்பிற்கான அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.128, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கை.சரவணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சு.ஸ்ரீகுமரன், சி.விமலன், வடகோவை வரதராஜன் ஆகியோர் கதைகள் குறித்த உரைகளை வழங்கவுள்ளனர். ஏற்புரையை நூலாசிரியர் மனோ சின்னத்துரை வழங்குவார். தொடர்ந்து கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (4-6)

# மகளிர் தின கூட்டமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின கூட்டமும் கவிஞர் சி.சிவசேகரத்தின் பெண் விடுதலைக் கவிதைகளின் தொகுப்பான கல்லாகவே ஆனாள் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

பெண்களை ஒடுக்கும் இன்றைய பொருளாதார முறைமைக்கு எதிராக எழுவோம்! என்ற தொனிப் பொருளை முன்வைத்து இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும், நாடகக் கலைஞருமான ச.நித்திகா தலைமைதாங்கவுள்ளதுடன், கருத்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி விஜிதா பகீரதன், சட்டத்தரணி ஆதித்தன் கார்த்திகா, சமூக செயற்பாட்டாளர்களான சத்தியமலர் இரவீந்திரன் மற்றும் வினுசன் ரேணுகா ஆகியோரும் வழங்கவுள்ளனர். (4-6)

# பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை தந்தை செல்வா கலையரங்கத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2022 ஆம் ஆண்டின் சிறந்த சூழல் நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க.கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2022 ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், இராச தானியத்திட்டத்தின் கீழ் சிறுதானியச் செய்கையைச் சிறப்பாக மேற்கொண்டவர்களுக்கு மாண்புறு உழவர் மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் விஞ்ஞானத் துறையின் தலைவர் பேராசிரியர் சிவசாந்தினி குகநாதன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் ச.சர்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரம் இல்லாமல் மலைவேம்பு மரத்தை வெட்டி எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரம் மற்றும் மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்திற்கும் எந்தவொரு ஆவணங்களும் இல்லை எனவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-104)

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை மிரட்டியவர்கள் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல் விடுத்த இருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருத்த வேலை இடம்பெற்ற போது மோட்டார்சைக்கிளில். வந்த இருவர் எரிபொருள் வழங்காமையை காரணம் காட்டி ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து விட்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் சி.சி.ரி.வி கமராவினை ஆதாரமாக கொண்டு இது தொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நல்லூர் மற்றும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன், மிரட்டல் விட பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# அராலியில் பல்பொருள் வணிக நிலையத்திற்கு தீ வைப்பு



(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை கடை ஒன்றுக்கு தீ வைத்த நிலையில் கடையானது பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

கடையின் உரிமையாளர் நேற்று காலை வழமை போல விற்பனை நடவடிக்கைக்காக கடையை திறக்க முற்பட்ட வேளை கடையானது, பகுதி எரிந்து சேதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு ரூபாய் 5 இலட்சம் பெறுமதியான மருந்துகள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்:-கஜிந்தன்)



# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாத்துறை சார்ந்த பல்வேறுபட்ட சேவைகளை வழங்குகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை, சர்வதேச தரத்தில் அங்கீகாரமுடைய நிலைபேறான சுற்றுலா சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை UNDP உடன் இணைந்து ஆலோசனை மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை ஹோட்டலில் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் நிலைபேறான எண்ணக்கருக்களின் அடிப்படையில் அமைந்த சர்வதேச தரத்திலான சான்றிதழை பெற்றுக்கொள்வதுடன் தங்களது சேவைகளை சிறந்த முறையில் சந்தைப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்வதற்கான முற்பதிவினை நாளை மாலை 6 மணிக்கு முன்னர் எமது அலுவலக தொலைபேசி இலக்கமான 021 221 7311 இற்கு அல்லது ச.கிஷோக்குமார் 077 794 7500 அல்லது சி.வசீகரன் 077 844 9742 அல்லது tourism north.srilanka@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு தகவல் வழங்குவதன் மூலம் மேற்கொள்ளுமாறு வடமாகாண சுற்றுலாப் பணியக பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தில் திருத்தங்கள் அவசியம் நீதி அமைச்சு விசேட கவனம்



(கொழும்பு)
போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் தொடர்புடையவர்களைத் தண்டிப்பது தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்வதில் நீதி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்களால் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் பழி வாங்கும் காரணங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இது தொடர்பில் கடுமையான கண்காணிப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

போதைப்பொருள் தொடர்பான சில மாதிரிகள் எப்போதாவது தவறாக இருக்கலாம். போதைப்பொருள் அல்லாத பொருட்கள் கூட போதைப் பொருள் மாதிரியாக எடுக்க அனுப்பப்படுகின்றன.

எனினும் இந்த பொருட்களுடன் சந்தேகத்துக்குரியவர் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தப்படுகின்ற போது அவர் விளக்கமறியலுக்கு அனுப்பப்படுகிறார்.

சில மாதங்களுக்கு பின்னரே அவர் வைத்திருந்தது போதைப்பொருளல்ல என்ற சோதனை முடிவு கிடைக்கிறது.

இதிலிருந்து சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

எனவே இந்த சட்டத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ரணிலுடன் சந்திரிகாவை கூட்டு சேர்க்க முயற்சி

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களுக்காக வலுவான கூட்டணியை உருவாக்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான சில குழுக்கள் இணைந்து இந்தக் கூட்டணியை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தலைமைப் பொறுப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் இணைத் தலைவர் ஒருவரை நியமிப்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவினையும் இணைத் தலைமைத்துவத்தை ஏற்று புதிய கூட்டணியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அழைப்பை பரிசீலித்து வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# மதுபான விற்பனையில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)
கலால் திணைக்களத்தின் கூற்றுப்படி இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் கலால் திணைக்களத்தின் வருமானம் 12.2% குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் கலால் வருமானம் 28.6 பில்லியன் ரூபாவாகும். இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் அந்த வருமானம் 25.1 பில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் மதுபானத்திற்கு விதிக்கப்பட்ட வரி 20% அதிகரிக்கப்பட்டதாலும், மதுபானத்தின் விலை உயர்வு காரணமாகவும் இதன் நுகர்வு குறைந்துள்ளது.

இதன் காரணமாக, சட்டபூர்வ மது விற்பனை குறைந்துள்ளதால், கலால்வரிவருவாய் குறைந்துள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்தது. (நி)

# தரம் 3 மாணவர்களில் 90 வீதமானோருக்கு எழுத்தறிவு இல்லை

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)
அரச பாடசாலைகளில் தரம் 3 இல் கல்வி கற்கும் 90 வீதமான மாணவர்களுக்கு எழுத்துகள் மற்றும் இலக்கங்கள் தொடர்பான அறிவு இல்லை என கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்றினால் பாடசாலைகள் மூடப்பட்டமையே இதற்கு காரணம் என கூறப்பட்டுள்ளது.

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுதுதல், அடிப்படைக் கணக்கு தொடர்பான அறிவு போன்றவற்றின் அடிப்படையில், கல்வி அமைச்சினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப் பகுதியில் 26 வீதமான மாணவர்கள் ஒன்லைன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# அறிவித்தல்

## நல்லூர் பிரதேசசபை நல்லூர் உப அலுவலகம் திருநெல்வேலி
## ஆதனப் பெயர்மாற்றம்
## ஆதன இல 56 கலாசாலை ஒழுங்கை வட்டாரம் 06

ஆதன இல 56 கலாசாலை ஒழுங்கை வட்டாரம் 06 இல் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் நாகரத்தினம் குத்தகைக்காரர் அன்ரன் ஆனந்தநாதன் எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி திருநெல்வேலி இறை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு J/114 திருநெல்வேலி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட "வண்ணாத்தியைசுட்டபுலம்" இல 6465 உறுதிப்படி நிலப்பரப்பு 6 குளி 10.20. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் 05.12.2015 ஆம் திகதியில் அளந்து வரையப்பட்ட 2015/3/226 இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக வடக்கு- கலாசாலை வீதி, கிழக்கு- 12 அடி அகல ஒழுங்கை, தெற்கு -அமிர்தவல்லி அருணாச்சலம் மற்றும் ஏனையோர் மேற்கு- ஒழுங்கையாகக் காணப்படுகின்றது.

இவ் ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு V.T சிவலிங்கம் முகதாவில் 21.01.2021 ஆம் திகதிய 6344 இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் நாகரத்தினம் ஞானசுந்தர் என்பவர் தனது அற்றோனித் தத்துவக்காரர் சியாமிளா துளசிகன் மூலம் வெளிப்பட்டு பிரசித்த நொத்தாரிசு மாணிக்கவாசகரினால் வரையப்பட்ட 11.03.1925 திகதிய 1116 ஆம் இலக்க சீதன உறுதியினாலும் S. அமிர்தலிங்கம் பிரசித்த நொத்தாரிசினால் 01.08.1967 ஆம் திகதிய 190 ஆம் இலக்க கைமாற்றல் உறுதியினாலும் தனது தந்தையின் தாயாரான கணபதிப்பிள்ளை கைம்பெண் பறுபதம் என்பவருக்குக் கிடைக்கப் பெற்ற ஆதனம் எனவும் அவர் அதனை பாரதீனப்படுத்தாமல் இறக்க அவரது ஏக வாரிசான தனது தந்தை நாகரத்தினத்தை வந்தடைந்தது எனவும் தந்தையின் பின் ஆண் வாரிசான தன்னை வந்தடைந்தது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு V.T சிவலிங்கம் முகதாவில் 6465 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நாகரத்தினம் ஞானசுந்தரர் அன்ரன் ஆனந்தநாதன் சிவராசினி என்பவருக்கு வழங்கியுள்ளார். தற்போது அன்ரன் ஆனந்தநாதன் சிவராசினி என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் அல்லது ஆட்சேபனைகள் காணப்படுமிடத்து பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அறியத் தருமாறும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாக ஆட்சேபனை தெரிவிக்குமாறும் அவ்வாறு எவரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்ரன் ஆனந்தநாதன் சிவராசினி என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இப் பெயர்மாற்றம் தொடர்பாக எழக்கூடிய எச்செயற்பாட்டிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**நல்லூர்.**

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 340 | 300 | 320 |
| தக்காளி | 150 | 120 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 60 | 70 | 100 | 100 |
| கரட் | ·100 | 180 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 50 |
| புடோல் | 180 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 450 |
| வெண்டக்காய் | 250 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 200 | 160 | 150 | 160 |
| லீக்ஸ் | 200 | 240 | 250 | 250 |
| பீற்றூட் | 100 | 160 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1500 | 2000 |
| போஞ்சி | 240 | 250 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 150 | 180 |
| கீரை - 1 பிடி | 60 | 110 | 60 | 100 |
| தேசிக்காய் | 80 | 250 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈ பலா | 100 | 140 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 130





மாக ஞாபகப்படுத்த விரும்புகிறோம். இனி இந்தக் கதையில், மேலே வரும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு இதைத் தெரிந்து கொள்வது மிக்க உபயோகமாயிருக்கும்.

தொண்ணூற்றாறு போர்க் காயங்களைத் தன் திருமேனியில் ஆபரணங்களாகப் பூண்ட விஜயாலய சோழனைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம்.

சோழ வம்சத்தின் பூர்வீக அரசர்களையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் சித்தரிக்கும் காட்சிகள் அவனுடைய கவனத்தைக் கவர்ந்து பரவசமடையச் செய்தன. முக்கியமாக, சென்ற நூறு வருடத்துச் சோழர்களின் சரித்திரம் அந்தச் சித்திர மண்டபத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. வந்தியத்தேவனுக்கு அதிகமான ஆர்வத்தை உண்டாக்கிய சித்திரங்களும் அவைதாம்.

இந்தக்கட்டத்தில், சென்ற நூறு வருடமாகப் பழையாறையிலும் தஞ்சையிலும் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களின் வம்ச பரம்பரையை வாசகர்களுக்குச் சுருக்க

சோழ மன்னர்கள் பரகேசரி, இராஜகேசரி என்னும் பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொள்வது வழக்கம். பரகேசரி விஜயாலயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் ராஜகேசரி ஆதித்த சோழன் பட்டத்துக்கு வந்தான்.

அவன் தந்தைக்குத் தகுந்த தனயனாக விளங்கினான். முதலில் அவன் பல்லவர் கட்சியில் நின்று பாண்டியனைத் தோற்கடித்துச் சோழ ராஜ்யத்தை நிலைப்படுத்திக் கொண்டான். பிறகு, பல்லவன் அபராஜித வர்மனோடு போர் தொடுத்தான். யானை மீது அம்பாரியில் இருந்து போர் புரிந்த அபராஜிதவர்மன் மீது ஆதித்த சோழன் தாவிப் பாய்ந்து அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தை வசப்படுத்தினான்.

பிறகு கொங்கு மண்டலமும் இவன் ஆட்சிக்குள் வந்தது. ஆதித்தன் சிறந்த சிவபக்தன். காவிரி ஆறு உற்பத்தியாகும் ஸஹ்ய மலையிலிருந்து அப்புண்ணிய நதி கடலில் கலக்கும் இடம் வரையில் ஆதித்த சோழன் பல சிவாலயங்களை எடுப்பித்தான்.

இராஜகேசரி ஆதித்த சோழனுக்குப் பிறகு பரகேசரி பராந்தகன் பட்டத்துக்கு வந்தான். நாற்பத்தாறு ஆண்டு காலம் அரசு புரிந்தான். இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த கரிகால் பெருவளத்தானுக்குப் பின்னர் சோழ வம்சத்தில் மாபெரும் மன்னன் பராந்தகன்தான்.

வீரநாராயணன், பண்டிதவத்சலன், குஞ்சரமல்லன், சூரசிகாமணி என்பன போன்ற பல பட்டப் பெயர்கள் அவனுக்கு உண்டு. "மதுரையும் ஈழமும் கொண்டவன்" என்ற பட்டமும் உண்டு. இந்த முதற் பராந்தகன் காலத்திலேயே சோழ சாம்ராஜ்யம் கன்யாகுமரியிலிருந்து கிருஷ்ணாநதி வரையில் பரவியது. ஈழ நாட்டிலும் சிறிது காலம் புலிக்கொடி பறந்தது. தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன் கூரை வேய்ந்து புகழ் பெற்ற பராந்தகனும் இவனே தான்.

இவனுடைய ஆட்சியின் இறுதி நாட்களில் சோழ சாம்ராஜ்யத்துக்குச் சில பேரபாயங்கள் வந்தன. அந்த நாளில் வடக்கே பெருவலி படைத்திருந்த இராஷ்டிரகூடர்கள் சோழர்களுடைய பெருகி வந்த பலத்தை ஒடுக்க முனைந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்து ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்திக்கு மூன்று புதல்வர்கள் உண்டு. இவர்களில் வீராதி வீரனாக விளங்கியவன் மூத்த புதல்வனாகிய இராஜாதித்யன் என்பவன். வட நாட்டுப் படையெடுப்பை எதிர்பார்த்து இராஜாதித்யன் திருமுனைப்பாடி நாட்டில் பெரும் சைன்யத்துடன் பல காலம் தங்கியிருந்தான்.

தன் தந்தையின் பெயர் விளங்கும்படி வீரநாராயண ஏரி எடுத்தான். அரக்கோணத்துக்கு அருகில் தக்கோலம் என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் இராஷ்டிரகூடப் படைகளுக்கும் பயங்கரமான பெரும் போர் நடந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒரே அடியில் இருநூறு பேர்

(நேற்றைய தொடர்ச்சி)

யாராலும் செய்ய இயலாத செயல் இது. நீ சொன்னபடி செய்து முடித்தால் இளவரசியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன் என்றான் அரசன்.

நான் அந்தப் பூதத்தைக் கொன்றுவிட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டுக் கையில் பிடித்த வாளுடன் காட்டிற்குள் நுழைந்தான் அவன்.

எவ்வளவு பெரிய கூர்மையான வாளும் பூதத்தை ஒன்றும் செய்ய முடியாது. எவ்வளவு வேகமாக, வலிமையாக வெட்டினாலும் அதற்குச் சிறு காயம் தான் ஏற்படும் என்பதும் அவனுக்குப் புரிந்தது.



தன் கையில் இருந்த வெண்ணெயை மாவில் உருட்டிப் பந்து போலச் செய்து கொண்டான் அவன். பார்ப்பதற்கு அது உருண்டையான கூழாங்கல் போல இருந்தது. அதைத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

குருவி ஒன்றைப் பிடித்த அவன் அதையும் தன் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அருகே இருந்த பெரிய மரம் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் பெரிய பூதம் ஒன்று அங்கே வந்தது. மூக்கை உறிஞ்சிய அது, இன்று எனக்கு நல்ல வேட்டை, மனித வாடை வீசுகிறதே! எங்கே இருக்கிறாய்? என்னிடம் இருந்து தப்ப முடியாது என்று மகிழ்ச்சியுடன் கத்தியது.

தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்ட அவன், ஏ! பூதமே! என்னையா தேடுகிறாய்? நான் இந்த மரத்தை விட்டுக் கீழே இறங்கினால் என்ன நடக்கும் தெரியுமா? இந்த உலகத்திலேயே நான் தான் வலிமையானவன்.

சென்ற வாரம் கூட ஒரே அடியில் இருநூறு பேரை கொன்று முந்நூறு பேரைக் காயப்படுத்தினேன். உன்னை விட நான் வலிமையானவன். என் ஒரு அடியைக் கூட நீ தாங்க மாட்டாய் என்று பெருமை பேசினான் அவன்.

நீ வலிமையானவன் என்றால் நிரூபித்துக் காட்டு, என்றது பூதம்.

அப்படியா? என்ற அவன் தன் சட்டைப் பையிலிருந்த கூழாங்கல் உருண்டையை எடுத்தான்.

அந்த உருண்டையை வானத்தில் தூக்கிப் போட்டுப் போட்டுப் பிடித்தான்.

இது என்ன சொல் பார்ப்போம் என்று கேட்டான் அவன்.

உருண்டையான கூழாங்கல் என்றது பூதம்.

என் வலிமையைப் பார் என்ற அவன் அந்த வெண்ணெய் உருண்டையைக் கைக்குள் வைத்து அழுத்தினான். அது பொல பொலவென்று தூள் தூளாகிக் கீழே விழுந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான். – நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சண்டை பிடித்ததைத் தவிர சாதித்தது ஏதுமுண்டோ

உள்ளூராட்சி சபைகள் இம்மாதம் 19ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்படுவதான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மீண்டும் அதற்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்ற கேள்விக்கான பதில் இன்னமும் வெறுமையாக இருக்கின்ற நிலையில், வடக்கு மாகாணத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகள் செம்மையாக இயங்கினவா? என்று கேட்டால், அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

பொதுவில் உள்ளூராட்சி சபைகள் தேவைதானா? என்ற கேள்வி நாடு முழுமையிலும் இருக்கின்றதாயினும் வட மாகாணத்தைப் பொறுத்தவரை மாநகர, நகர, பட்டின, பிரதேச சபைகளின் இயங்குநிலை என்பது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்திவிட்டது.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபையின் இயங்குநிலை சொல்லிமாளா.

வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதன் மூலமாக மாநகர முதல்வர்களை அடிக்கடி மாற்றுகின்ற குழப்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இதனால் யாழ்ப்பாண மாநகர சபையால் ஒரு சில திட்டங்களைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியவில்லை.

இதுபோலவே கணிசமான பிரதேச சபைகளில் சண்டையும் சச்சரவும் மலிந்து கிடந்தன.

சபைக்கூட்டங்கள் நடக்கும்போது, குழறிக் கத்தி குழப்பங்களை ஏற்படுத்தி மக்களுக்கு எந்த நன்மையையும் கிடைக்கவிடாமல் தடுத்தவர்களை நினைக்கும்போது இது எங்கள் தமிழ் இனத்தின் சாபக்கேடு என்று கருதுவதைத் தவிர வேறு எதுவுமில்லை.

உண்மை. மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபைகளை ஆளுகை செய்யும்போது, தத்தம் பிரதேசத்தின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வது, அந்தப் பிரதேசத்திலுள்ள வளங்களை தக்கமுறையில் பயன்படுத்தி, உற்பத்தி முயற்சிகளை முன்னெடுக்க முடியும்.

இதன்மூலம் அப்பகுதி மக்களின் வாழ்வியல் வளம் பெறும்.

சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் பாரிய அபிவிருத்தி எட்டப்படும்.

இந்த அடிப்படையிலேயே மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டமைந்ததாக உள்ளூராட்சி அமைப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

ஆனால் இங்கோ அரசியல் காழ்ப்புணர்வு, தனிப்பட்ட குரோதங்கள், சுயநலப் போக்குகள், கத்திக்குழறும் இயல்பினர்கள் என எல்லாமும் சேர்ந்து உள்ளூராட்சி சபைகளை நாசமறுத்துவிட, எந்த பிரயோசனமும் இல்லாமல் வெறுமனே காலம் கடந்து காலாவதியாகிப் போனதுதான் மிச்சம்.

## இலங்கைக்கு உரம் வழங்கியமை அமெரிக்காவின் உறுதிப்பாட்டின் அடையாளம்

### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)
இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 36 ஆயிரம் மெட்ரிக் தொன் TSP பொசுப்பேற்று உரம், 10 இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளின் நெல் உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

36 ஆயிரம் மெட்ரிக் தொன் TSP பொசுப்பேற்று உரம் தாங்கிய கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த உரமானது, யு.எஸ் எய்ட் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமது டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இது இலங்கைக்கு உதவியளிக்கும் அமெரிக்காவின் உறுதிப்பாட்டின் அடையாளமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தங்கத்தின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)
நாட்டில் கடந்த சில நாட்களாக, தங்கத்தின் விலை வீழ்ச்சியை தந்திருந்த நிலையில், தற்போது தங்கத்தின் விலை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) 166,500 ஆக இருந்த 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 172,500 ஆக உயர்வடைந்துள்ளது. (நி)

## உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பரீட்சை இன்று

(கொழும்பு)
க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் தரம் 12 இல் கல்வி கற்ற மாணவர்களுக்காக இந்த பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் 3,269 பரீட்சை மத்திய நிலையங்களில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 12.10 வரை பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது போன பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு 2023 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்காக நடத்தப்படும் பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சையின் போது, தமது பாடசாலைகளின் ஊடாக மீள விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

## மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த மனு 31ஆம் திகதி விசாரணைக்கு

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டுக்கு எதிராக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை ஜூலை 31 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு நேற்று காலை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன்படி, இந்தமனு 5 நீதிபதிகள் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்பாக ஜூலை 31 மற்றும் ஆகஸ்ட் 09 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (ம-7)

## அரச வெசாக் பண்டிகை இம்முறை புத்தளத்தில்

(கொழும்பு)
2023 ஆம் ஆண்டு அரச வெசாக் பண்டிகை புத்தளம் மாவட்டத்தில் நடைபெறுவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, அரசாங்க வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி புத்தளம் கபெல்லவ ஸ்ரீரதன சிறி விகாரையில் கொண்டாட்டங்களை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக புத்தசாசன, சமய அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## ரயிலில் குழந்தையை விட்டு சென்ற தம்பதிக்கு பிணை

மீனகயா புகையிரதத்தில் குழந்தையைக் கைவிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தம்பதிகளை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிணை கிடைத்ததும் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழந்தையின் பெற்றோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

பண்டாரவளை நன்னடத்தை உத்தியோகத்தர் விடுத்த கோரிக்கையை அடுத்து, குழந்தையின் போசாக்கு தேவையை கருத்தில் கொண்டு குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, பண்டாரவளை நன்னடத்தை அதிகாரியின் கடுமையான கண்காணிப்பின் கீழ் குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் சந்தேகத்திற்குரிய தம்பதியினரின் பெற்றோருக்கு குழந்தையின் போசாக்கு தேவைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** அண்ணா பண்ணை, VTS ஒழுங்கை, உரும்பிராய், அங்கிலிப்பாய் இணுவில், உரும்பிராய் இந்துக் கல்லூரி, கற்பகப் பிள்ளையார் கோவிலடி உரும்பிராய், சேமப்புலம், சிவன் வீதி உரும்பிராய், உரும்பிராய், உரும்பிராய் சந்தை - விளாத்தியடி மருதானர் மடம், மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, நெடுபாட் வலைத் தொழிற்சாலை, ஸ்ரீ லங்கா ஐஸ் தொழிற்சாலை, ATI குருநகர், கட்டிட திணைக்களம், கடற்கரை வீதி, சீனோர் குருநகர், ஐஸ் தொழிற்சாலை கடற்கரை வீதி, ஏ.வி.வீதி கொழும்புத்துறை, கடற்கரை வீதி பழைய பூங்கா வீதி சந்தி, கொழும்புத்துறை- நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி சுவாமியார் சந்தி, டேவிட் வீதி கடற்கரை வீதி, குருநகர், குருநகர் கடற்கரை வீதி, மணியந்தோட்டம், பாசையூர், பாசையூர் ஈச்சமோட்டை வீதி, புங்கங்குளம் கொழும்புத்துறை வீதி சந்தி, உதயபுரம், அன்னாங்கை சந்தி கோண்டாவில், இ.போ.ச டிப்போ பலாலி வீதி கோண்டாவில், குமாரகோட்டம், இணுவில் மானிப்பாய் வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டவர் தலைமறைவு

(கரணவாய்)
வடமராட்சி கரணவாய் பகுதியில் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி பட்டப்பகலில் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் சந்தேகிக்கும் ஒருவரின் பெயரையும் தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளச் சந்தேக நபரின் வீட்டிற்கு பல தடவை சென்ற போதும் அவர் வீட்டில் இல்லாது தலைமறைவாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன்னாவெளி வேரவில் கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலை அமைக்கலாமா?

## ஆய்வு செய்யக் கோரி யாழ்.பல்கலை துணைவேந்தருக்கு சிறீதரன் எம்.பி கடிதம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள வேரவில் கிராமத்தில், சீமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதன் சாதக, பாதகத் தன்மையை ஆய்வுக்கு உட்படுத்தக் கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, மொட்டையன்குளம், பிருந்தாவனம், மதனி குடியிருப்பு, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் சூழவுள்ள வேரவில் கிராமத்தில் 1156 குடும்பங்களைச் சேர்ந்த 4276 இற்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடற்புறச் சூழலியல் கொண்ட இப்பிரதேச மக்கள் ஏற்கனவே குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் நிலையில், தமது பகுதியில் புதிதாக ஓர் சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்படுமாயின் அது தமது இருப்பைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய அபாயகரமான சூழலைத் தோற்றுவிக்கும் என்ற இயல்பான அச்சத்திற்கு ஆட்பட்டவர்களாக, அதுபற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

எமது மக்களின் உணர்வு நிலைகளோடு என்றும் ஒருமித்திருக்கும் நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தன்சார் சமூகத்தின் இருப்புக்காக ஆற்றக்கூடிய சமூக நலன் சார் பணிகளில் ஒன்றாக இதனைக் கருதி, வேரவில் பிரதேசத்தில் சீமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதால் எமது மக்களின் இயல்பு வாழ்வில் ஏற்படக் கூடிய குடிநீர் உள்ளிட்ட சூழலியல் இடர்பாடுகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்துவதற்காக, துறைசார் பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஓர் முழுமையான ஆய்வை மேற்கொள்வதன் மூலம், அப்பிரதேச மக்களுக்கும் எமது சமூகத்துக்கும் இதன் சாதக, பாதக தன்மைகள் குறித்த தெளிவுபடுத்தலை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-316)

# உணவகங்களில் சிற்றுண்டிகள் கட்டுப்பாட்டு விலையின்றி விற்பனை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(நெளுக்குளம்)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் வவுனியா உணவகங்களில் சிற்றுண்டிகள் ஒவ்வொரு விற்பனை நிலையங்களிலும் ஒவ்வொரு விலைகளில் விற்பனை செய்யப்படுவதுடன் சிற்றுண்டிகளின் விலைகள் சில உணவகங்களில் காட்சிப்படுத்தப்படுவதில்லை என்றும் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் உணவகங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்கள் உணவு வகைகளின் விலைகளை கேட்டறிந்த பின்னரே உணவருந்தும் நிலை ஏற்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தி ஒரே விலைகளில் உணவு வகைகளை விற்பனை செய்வதற்கு வவுனியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் அதன் பலன்களை மக்கள் அனுபவிக்க முடிவதில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (4-6-299)

# அம்பலப்பெருமாள் குளத்தை புனரமைக்க நிதியினைப் பெற்றுத் தாருங்கள்

## கமக்கார அமைப்பினர் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் புனரமைப்புக்கு நிதியினை பெற்றுத் தாருங்கள் என கிராம கமக்கார அமைப்பினர் வடமாகாண ஆளுநரின் செயலாளரினை நேற்று முன்தினம் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

கடந்த 15 நாட்களுக்கு முன்னர் வடமாகாண ஆளுநருக்கு குளப் புனரமைப்பிற்கு நிதியினை பெற்றுத் தாருங்கள் என கமக்கார அமைப்பினால் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்ட நிலையில் ஆளுநர் செயலகத்தினால் கமக்கார அமைப்பிற்கு பதில் கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் கமக்கார அமைப்பினர் ஆளுநரின் செயலாளரினை நேரில் சந்தித்தார்.

இதன்போது அம்பலப்பெருமாள் குளம் பெரும் சேதம் அடைந்துள்ளது. அணைக்கட்டு பெரும் சேதம் அடைந்திருப்பதன் காரணமாக ஒவ்வொரு பருவ மழை காலத்தின் போதும் பெருமளவு மண் மூடைகள் அடுக்கி குளத்தினை பாதுகாத்து வருகின்றோம். குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததன் காரணமாக 200 ஏக்கருக்கு மேலான நிலப் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்ய முடியாது உள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் உலக வங்கியின் உதவியுடன் ரூபாய் 361 மில்லியன் நிதியில் குளத்தின் அணைக்கட்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெறும். குளத்தின் கீழான வாய்க்கால்கள் புனரமைப்பிற்கு ரூபாய் 315 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கடந்த ஐந்தாண்டுகளாக கூறி வருகின்றனர்.

ஆனால் நிதி வராததன் காரணமாக குள வேலைகள் இடம்பெறாத நிலை காணப்படுகின்றது. குள புனரமைப்பிற்கான நிதியினை ஆளுநர் செயலகம் பெற்றுத் தர வேண்டும் என கமக்கார அமைப்பினரால் ஆளுநரின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (4-6-350)

# 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுவிப்பு

## படகுகள் அரசுடைமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 12 மீனவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 12 மீனவர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய படகுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. குறித்த பன்னிரெண்டு மீனவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பும் பணிகளில் இந்தியத் துணைத் தூதரகம் ஈடுபட்டு வருகிறது. (4-6-104-33)

# ஜெயபுரம் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் வேண்டும்

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

கிளிநொச்சி ஜெயபுரம் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சு.சந்திரபோஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

குறித்த வைத்தியசாலைக்கு 2021 ஆம் ஆண்டில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டு குறித்த வைத்தியர் இரு மாதங்களில் வேறு இடத்திற்கு சென்று விட்டார். ஜெயபுரம் கிராமத்தில் 480 குடும்பங்கள் வாழ்கின்றன.

நாள்தோறும் இவ் வைத்தியசாலைக்கு 75 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் செல்கின்றனர்.

இந் நிலையில் ஜெயபுரம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (4-6-350)

# வட்டு.மேற்கில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு; வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையில் 07.03.2023 அன்று வெளியாகிய 'வட்டு.மேற்கு பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு' எனும் செய்தி தொடர்பில் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது கோபுரம் அமைப்பதற்கு உரிய சகல ஆவணங்களும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் சம்மதம் பெறப்பட்ட பின்னரே குறித்த அனுமதி வழங்கப்பட்டதாகவும் கோபுரம் அமையப் பெறவுள்ள குறித்த இடத்திற்கு அருகில் உள்ள பொது அமைப்புகளின் சம்மதக் கடிதங்கள் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (4)



கிளிநொச்சி கோரக்கண்கட்டு கிராமத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி நகர றொட்டரிக் கழகத்தினால் தென்னை மரக்கன்றுகள் நடுகை நேற்று முன்தினம் செய்யப்பட்டுள்ளன. (படம்-யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்...

செய்யப்பட்டு, கடந்த 15 ஆண்டு களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த எழுத்தாளர் செல்லையா சதீஸ்குமார் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 15 வருடகாலம் சிறை வைக் கப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

செல்லையா சதீஸ்குமார் உள்ளிட்ட மூன்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஜனா திபதியினால் பொது மன்னிப்பு அறிவிக் கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## திருவள்ளுவர்...

டத்தின் திரு வள்ளுவர் சிலையை செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச் சாரிய சுவாமிகள், முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் வி.மணிவண் ணன் மற்றும் மாநகர சபை உறுப் பினர்கள், உத்தியோகத்தர்கள், ரில்கோ சிற்றி ஹோட்டல் ஊழியர்கள்,

பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,9,33,104)

## 40 அரச...

கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் நீட் டிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறை வேற்று சபைக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நீட்டிக்கப்பட்ட கடன் வச திக்கு அனுமதி கிடைத்ததன் பின்னர், அரசு தலைபீட்டில் மீண்டும் எந்த அரசத் தொழிலையும் தொடங்க மாட் டோம். தற்போது செயல்பாட்டில் மிக வும் கீழ்நிலையில் உள்ள அரசு நிறு வனங்கள் 40க்கும் மேற்பட்டவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் நிதி அமைச் சகத்தின் கட்டுக்குள் கொண்டு வந்து மூடுவதற்குத்தேவையான பணிகளைச் செய்து வருகிறோம்.

தற்போது இந்த நிறுவனங்களில் உள்ளவர்களுக்கு எந்த அநீதியும் நடக்காமல் இருக்க நாங்கள் பணி யாற்றி வருகிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7,9)

## வாயில் நுரை...

நேற்று முன்தினம் பூநகரி 4ம் கட் டைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேபிடத்தைச் சேர்ந்த பாலசந்திரன் இசைமாறன் (வயது-24) என்ற இளைஞனே உயிரிழந்தவரா வார்.

இது தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7,9,316)

## சவேந்திர சில்வா...

நாவற்குழியில் அமைந்துள்ள விகா ரையில் புதிதாக அமைக்கப்பட்ட பகுதி யில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற் பதற்காகவே சவேந்திர சில்வா இவ் வாறு வருகை தரவுள்ளார்.

சவேந்திர சில்வா வருகை தரும் நிகழ்விற்காக தென்னிலங்கையில் இருந்து 128 பௌத்த பிக்குகளும் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்த நிகழ்வுகள் இன்று காலை முதல் பிரித் ஓதுதல் மற்றும் விசேட பூசை ஏற்பாடுகள் என மிகப்பெரும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின் றது. (ம-7,9,104)

## அரசுக்கு எதிராக...

சபைக்கு முன்பாக தீப்பந்தப் போராட் டம் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்டது.

200% மின்சார கட்டண உயர்வை கைவிடு, உணவு எரிபொருள் விலை யைக் குறை, உழைக்கும் மக்களை பட்டினிக்குத் தள்ளாதே, அடக்கு முறைகளை ஏவி மக்களை ஒடுக் காதே! உள்ளிட்ட பல்வேறு கோஷங் களை எழுப்பியும் பதாகைகளைத் தாங்கியவாறும் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது புதிய ஜனநாயக மார்க் சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல், வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், பிரதேச சபை உறுப்பினர் செல்வம் கதிர்காமநாதன் உள்ளிட்டவர்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களும் கலந்து கொண் னர். (ம-7,9)

## மோ.சைக்கிளி...

மோட்டார் சைக்கிளில் மகனுடன் அச்சுவேலி நோக்கி சென்று கொண்டி ருந்த மேற்படி பெண்மணி கடந்த புதன் கிழமை காலை வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் மோட் டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பின்புறமாக வீழ்ந்து படுகாய மடைந்துள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார்.

மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிரேம குமார் விசாரணைகளை மேற்கொண் டார். (ம-7,9,60)

## காங்கேசன்துறை...

இப் பயணத்தினை மேற்கொள் வதற்கு பயணி ஒருவருக்கு இலங்கை பண மதிப்பில் 35000 ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை அறவிடப்பட வுள்ளது.

காங்கேசன் துறையில் இருந்து காரைக்காலுக் கான பயணிகள் கப்பல்சேவையை தொடங்குவது தொடர்பில் கப் பல் மற்றும் சிவில் விமானப் போக்கு வரத்து அமைச் சர் நிமால் சிறி பால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாட லிலேயே இந்த முடிவு எட்டப்பட் டுள்ளது.

இந்த கப்பல் சேவையை ஐ.என்.டி.எஸ். ஆர்.ஐ எனும் நிறுவனம் தொடங் கவுள்ள நிலை யில் 120 பயணி கள் பயணிக்கத் தக்க கப்பல் ஒன் றினை முதற்கட்ட மாக சேவையில் ஈடுபடுத்த தீர் மானிக்கப்பட் டுள்ளது.

கப்பல் மற்றும் சிவில் போக்கு வரத்து அமைச் சில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலை மையில் இடம் பெற்ற இக்கலந் துரையாடலில் கடற்படை அதி காரிகள் துறை முக அதிகார சபை அதிகாரிகள், குடிவரவு குடிய கல்வு திணைக்க அதிகாரிகள், கப் பல் நிறுவன அதிகாரிகள் என பல ரும் கலந்து

## மூக்குக் கண்ணாடி கண்டெடுப்பு

கந்தர்மடம், குமாரசாமி வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்று கண்டெ டுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் வேதாந்தமடம், இல.18, குமாரசாமி வீதியில் பெற்றுக் கொள்ளவும்.(ம-7,9)

கொண்டனர்.

இதன்போது காங்கேசன்துறையில் சுங்கம் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களங்களினை நிறுவுவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப் பட்டது. (ம-7,9)

## கீரிமலை...

ஆலயம் அமைந்திருந்த இடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுடன் கலாநிதி ஆறு.திருமுருகன் நேற்றைய தினம் சென்று பார்வையிட்டார்.

குறித்த ஆலயம் அமைந்திருந்த இடத்தில் எதிர்வரும் பங்குனி உத்தர தினத்தன்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வதற்கான அனுமதியினை பெற்று தருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக வும், பங்குனி உத்தரத்திற்கு முன்னர் அதற்குரிய அனுமதி கிடைத்தால் அவ் விடத்தில் சிவலிங்கம்பிரதிஷ்டை செய்ய வுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7,9,33,104)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1517
வெற்றி இலக்கங்கள்
தனுசு 9 7 0 1 7 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1092
K 06 55 56 62
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.17
சீட்டிழுப்பு இலக்கம் 3304
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 12 23 44 59
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1410
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Y 03 14 38 47 62

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.17
சீட்டிழுப்பு இலக்கம் 371
கடகம் 02 13 20 58 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/17
சீட்டிழுப்பு இலக்கம் 5062
A 0 7 5 8 2 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2037 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.17 தினம் வெள்ளிக்கிழமை
Y 31 33 58 69
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,796,560/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.17
சீட்டிழுப்பு இல : 4198
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,356,920/-
வெற்றி இலக்கங்கள்
02 17 23 55 V
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 301
சீட்டிழுப்பு திகதி 2023.03.17
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 21 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,135,120/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,864,128/-
திகதி 2023-03-17
வெற்றி வாரம் 3749
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 07 27 35 55
சிம்மம்
3071
563
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,988,440/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 12 22 52 59 62
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1213
2023.03.17 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 314,211,588.20
தொலைபேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
DLB

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1863
வர்ணம் : இளநீல
சீட்டிழுப்பு திகதி : 2023.03.17
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,748,160/-
03 35 63 73 P
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்விக்கு கடன் திட்டம் நிதியமைச்சு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்களுக்கு உயர் கல்வி கற்கைநெறிகளை தொடர்வதற்காக 11 இலட்சம் ரூபாய் வட்டியில்லா கடன் வழங்குவதை மீள ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் 3 அரச வங்கிகளின் ஊடாக வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

தொழிநுட்ப கற்கைநெறிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும், பல சுற்று கலந்துரையாடலின் பின்னர் நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

# இலங்கையில் கடந்த வருடத்தில் 3,406 தற்கொலைகள் பதிவு

## ஆண்களின் மரணமே அதிகம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் 3,406 தற்கொலைகள் பதிவாகியுள்ளதாகவும், ஒவ்வொரு நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தற்கொலை பதிவாகுவதாகவும் சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ரொஹான் ரத்நாயக்க தெரிவித்தார்.

மனநலம் மேம்படும் பட்சத்தில் தற்கொலைகளை தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

ஊடக அமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்து இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடாத்திய செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு பதிவான தற்கொலைகளில் 2,832 பேர் ஆண்கள் என்றும், மீதமுள்ள 574 பேர் பெண்கள் என்றும் அவர் கூறினார். அதன்படி, பெண் தற்கொலைகளை விட ஆண்களின் தற்கொலை வழக்குகள் அதிகம்.

தீராத நோய்கள், ஆண்மைக்குறைவு, மனநோய் மற்றும் போதைப்பொருள் பாவனை போன்றவற்றினால் மக்கள் தற்கொலையை நாடுவதாகவும் டொக்டர் ரொஹான் ரத்நாயக்க தெரிவித்தார்.

கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிகளவான தற்கொலைகள் இடம்பெற்றுள்ள அதேவேளை கடந்த வருடம் கம்பஹா மாவட்டத்தில் தற்கொலைகள் ஒழுங்கற்ற முறையில் அதிகரித்துள்ளதாக மனநல சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்கொலைகளுக்கு பொருளாதாரப் பிரச்சினைகளும் ஒரு காரணம் என்றும் அவர் கூறினார். வயதுக்கு ஏற்ப ஆண்களின் தற்கொலைகள் அதிகரித்து வருவதாகவும், அதே சமயம் பெண்கள் இளம் வயதிலேயே தற்கொலை செய்துகொள்வதாகவும் ஆய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார். (ம-7,9)

# திருட்டில் ஈடுபட்ட கும்பல் பொதுமக்களால் மடக்கி பிடிப்பு

## காரைநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் கோவளம் பகுதியில் நேற்று மாலை திருட்டில் ஈடுபட்ட ஐவர் அடங்கிய கும்பல் ஒன்று அப்பகுதி மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட பட்டாரக வாகனம் ஒன்றும் திருடப்பட்ட வீட்டு நிலைகளும் பொதுமக்களால் மீட்கப்பட்டுள்ளது.

சுழிபுரம், பண்டத்தரிப்பு பகுதிகளைச் சேர்ந்த ஐவர் அடங்கிய இளைஞர் குழு ஒன்று இவ்வாறு காரைநகர் கோவளம் பகுதியில் உள்ள வீடுகளில் உள்ள வீட்டு நிலைகளை திருடிய சந்தர்ப்பத்தில் அப்பகுதி மக்களினால் மடக்கிப் பிடிக் கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

காரைநகர் - மணற்காடு அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் நேற்றைய தினம் கோவளப்பகுதி மக்களின் திருவிழா இடம்பெறுகின்ற நிலையில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ம-7,9,104)

# முன்னாள் எம்.பி ஸ்ரீரங்கா கைது

(வவுனியா)

உடல்நல குறைவினால் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீரங்காவை கைது செய்யுமாறு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருந்தது.

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து தொடர்பான வழக்கின் சாட்சி ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அருகில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தில் ரங்காவின் மெய்ப்பாதுகாவலராக செயற்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்திருந்தார்.

இது தொடர்பான வழக்கு வவுனியா மேல்நீதிமன்றில் இடம்பெற்று வந்ததுடன். ரங்கா உட்பட குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய உயர் பொலிஸ் அதிகாரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். (ம-7,9)

# அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பி. பியசேன

## வீதி விபத்தில் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.



நேற்றுக் காலை 6.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுக் கொண்டிருந்த அவர், பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான வீதியில் சென்ற பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த அவர் கல்முனை ஆதார வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பொடியப்பு பியசேன, பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டார். அந்தக் கட்சியில் 2015 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். (ம-7)


உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

✓ வயது-22 தொடக்கம் 35

✓ தகுதி- பட்டதாரிகள்

(C-6176)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

வயது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-6176)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

மரண கிரியைகள், அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு தொடர்பு கொள்ளவும்.

சபா. செல்லப்பா குருக்கள் யாழ்ப்பாணம்

077 230 5789
074 061 8739
077 670 1678

(14943)

வேலையாள் தேவை

மாவறுக்க பெண் வேலையாள் தேவை.
சம்பளம் : - 1800/= இற்கு மேல்
077 936 1356

(C-6175)

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழக ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிருவாக சபைத் தெரிவும்

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழக ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிருவாக சபைத் தெரிவும் நாளை 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மண்டைதீவு மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- நிருவாகம்

(14936)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு

● மூன்று பரப்புக்காணி
● KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
● தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

076 755 8606 | 076 436 5814

(14939)

வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புத்தக மற்றும் போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.
யாழ் நகருக்கு அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது.

அடிப்படைச் சம்பளம்
20,000 /= - 25,000 /=
T.P : 076 832 3682

(14938)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.